# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.52 (L.W.81)

| | |
|---|---|
| Name | Anandhakumar |
| Father/Husband Name | V.C.Selvaraj |
| Calling/Occupation | ADSP |
| Age | 55 |
| Address | ADSP, ATS, Coimbatore. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 28.04.2025.

(A6 absent. And his absence condoned u/s 317 of Cr.P.C. petition filed and allowed. A1 to A5 present)

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 02.20 P.M.**

நான் தற்போது கோயம்புத்தூர் தீவிரவாத தடுப்புப்பிரிவில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2015ம் வருடம் நான் கோயம்புத்தூர் சிறப்புப்புலனாய்வு பிரிவில் காவல் துணைக் காண்காணிப்பாளராக இருந்தபோது வேலூர் சரக குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத்துறையில் காவல் துணைக் கண்காணிப்பாளராக கூடுதல் பொறுப்பு வகித்தேன். கடந்த 01.07.2015-ம் தேதி வேலூர் மாவட்டம் பள்ளிக்கொண்டா காவல் நிலைய குற்ற எண் 158/2015 கு.வி.மு.ச பிரிவு 176 வழக்கின் புலனாய்வினை தமிழ்நாடு காவல்

துறை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண் RC No. 108445/Crime II (1)/2015, நாள் 29.06.2015 அவர்களின் ஆணைப்படி அந்த ஆணை அ.த.சா.ஆ.83 ஆக குறியீடு செய்யப்படுகிறது. குற்றப்புரிவு குற்றப்புலனாய்வுத்துறைக்கு மாறுதல் செய்யப்பட்ட ஆணையின் அதன் தொடர்ச்சியாக குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறையின் கூடுதல் இயக்குநர் அவர்களின் குறிப்பாணை எண் RC No.C5010718/2015, நாள் 30.06.2015 ஆணைப்படி என்னை மேற்படி வழக்கின் புலனாய்வு அதிகாரியாக நியமித்து திருவண்ணாமலை குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை ஆய்வாளர் திரு.கருணாநிதி அவர்களை உதவி புலன் விசாரணை அதிகாரியாக நியமித்தும் கொடுக்கப்பட்ட ஆணைகளை பெற்றேன். அந்த ஆணை ஏற்கனவே அ.த.சா.ஆ.68 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் அன்றைய தினம் பள்ளிக்கொண்டா காவல் நிலைய குற்ற எண் 158/2015 வழக்குக்கோப்பின் 1 முதல் 140 பக்கங்கள் வரையிலானவை வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பபாளர் அவர்களின் குறிப்பாணை எண் C No.J I (1)/03088/2015, நாள் 30.06.2015 ஆணையின் பேரில் பள்ளிக்கொண்டா காவல் நிலைய பொது நமுனா எண் 19/General Memo / CTS/ELR /2015, நாள் 01.07.2015–ன்படி ஒப்புவித்ததை பெற்று வழக்குக்கோப்பினை பார்வையிட்டேன்.

வழக்குக்கோப்பில் இருந்த முதல் தகவல் அறிக்கையினை வேலூர் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை குற்ற எண் 5/2015 பிரிவு 176 கு.வி.மு.ச.–ஆக மறு பதிவு செய்தேன்.

அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.84. என்னால் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசலையும் பள்ளிக்கொண்டா காவல் நிலைய குற்ற எண் 158/2015 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் நகலையும் காவல் துறை இயக்குநர் மற்றும் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறையின் கூடுதல் இயக்குநர் அவர்களின் ஆணைகளையும் இணைத்து கனம் குற்றவியல் நடுவர் எண்.3, வேலூர் அவர்களுக்கு த.கா.2940 திரு. ரஞ்சித் என்பவர் மூலம் அனுப்பி வைத்தேன்.

இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை என்னுடைய விசாரணைக்கு வைத்துக்கொண்டேன். பள்ளிக்கொண்டா காவல் நிலைய குற்ற எண் 158/2015 வழக்குக்கோப்பினை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.5, வேலூர் அவர்களிடமிருந்து குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை நீதிமன்றமான குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.3, வேலூர் அவர்களின் நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்ய ஆணையிட வேண்டி வேலூர் மாவட்ட முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்தேன். அந்த வேண்டுகோள் கடிதம் அ.த.சா.ஆ.85.

அதன் பேரில் பிறப்பிக்கப்பட்ட ஆணை அ.த.சா.ஆ.86. பின்பு சாட்சிகள் கௌஷ் பாஷா மற்றும் அலி அக்பர் அவர்களுக்கு விசாரணைக்கு ஆஜராக வேண்டி உதவி புலன் விசாரணை அதிகாரி மூலம் அழைப்பாணை கொடுத்து சார்வு செய்யப்பட்டது. மேலும் இவ்வழக்கு சம்பந்தமான ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளை பள்ளிக்கொண்டா காவல் நிலையததிலிருந்து கைப்பற்றி வர உதவி

புலன் விசாரணை அதிகாரி திரு.கருணாநிதி அவர்களுக்கு நான் உத்தரவிட்டதின் பேரில் அவர் அன்று இரவு 22.00 மணிக்கு பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திலிருந்து பொதுநாட்குறிப்பு, முதல் தகவல் அறிக்கை பதிவேடு பாகம் – 1, சுற்றுக்காவல் பதிவேடு, மாதிரி பணி பதிவேடு, பணி பதிவேடு, ஆஜர் பட்டி, கைதிகள் பரிசோதனை பதிவேடு, சமுதாய பணி பதிவேடு, ஆய்வாளர் அவர்களின் தினசரி நாட்குறிப்பேடு, மருத்துவ நமுனா புத்தகம் மற்றும் பள்ளிக்கொண்டா காவல் நிலைய குற்ற எண் 140/2015 வழக்குக்கோப்பின் ஜெராக்ஸ் நகல் மற்றும் மருத்துவமனை தகவல் பதிவேடு ஆகியவற்றை மகசரில் கைப்பற்றி வந்து என்னிடம் ஒப்படைத்தார். அந்த மகசர் ஏற்கனவே அ.த.சா.ஆ.26 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கு ஆவணங்கள் அ.த.சா.ஆ.28 முதல் அ.த.சா.ஆ.38 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

02.07.2015 ம் தேதி இவ்வழக்கில் சாட்சிகள் அலி அக்பர், கௌஷ் பாஷா, த.கா.361 நந்தக்குமார், த.கா.2394 முத்துக்குமரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளான நாகராஜன், ஐயப்பன், முரளி, சுரேஷ், முனியன், சபாரத்தினம் ஆகியோர்களையும் விசாரித்தேன். அன்றைய தினம் வழக்கின் எதிரியான ஆய்வாளர் மார்டின் பிரேம்ராஜ் அவர்கள் 17.06.2015 ம் தேதி பிடித்த பொலிரோ வாகனம் மற்றும் லேப்டாப்பினை ஆந்திர மாநிலம் பங்காருபள்ளி காவல் நிலைய உதவி ஆய்வாளர் பெற்றுக்கொண்டார்.

03.07.2015 ம் தேதி இவ்வழக்கில் சாட்சிகள் ஷாஜகான், பரிதா பேகம், கலீல், மு.நி.கா.3604 சீனிவாசன், சிறப்பு உதவி ஆய்வாளர்

ராஜேந்திரன், மருத்துவர் சரவணக்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

04.07.2015–ம் தேதி இவ்வழக்கில் சாட்சிகள் மணிகண்டன், அனுமந்தன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினம் இவ்வழகில் புலன் விசாரணைக்கு உதவியாக இருக்க வேண்டி வருவாய் அலுவலர்களை நியமிக்கக்கோரி வேலூர் வருவாய் வட்டாட்சியர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அதன் பேரில் வட்டாட்சியர் அவர்கள் அவரது அவசர சுற்றிக்கை எண் ந.கா.B1/6023/2015, நாள் 04.07.2015–ன்படி கிருஷ்ணன் வேலூர் உள்வட்ட வருவாய் ஆய்வாளர் மற்றும் விஜய் கிராம நிர்வாக அலுவலர் எண்ணாத்தூர் அவர்களை நியமித்து சுற்றறிக்கை அனுப்பினார்.

05.07.2015–ம் தேதி பள்ளிக்கொண்டா காவல் நிலைய குற்ற எண் 140/2015 பிரிவு பெண் காணவில்லை வழக்கில் காணாமல் போய் கண்டுபிடிக்கப்பட்ட சாட்சி பவித்ரா என்பவரை வேலூர் அரியூர் பெண்கள் காப்பகத்திலிருந்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

06.07.2015–ம் தேதி இவ்வழக்கில் ஆய்வாளர் மார்டின் பிரேம்ராஜ் அவர்கள் பள்ளிக்கொண்டாவில் தங்கியிருந்த உதவி ஆய்வாளர் குடியிருப்பினை சோதனை செய்ய வேண்டி கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.3, வேலூர் அவர்களுக்கு முன் தகவல் கடிதம் அனுப்பி வைத்தேன். அந்த கடிதம் அ.த.சா.ஆ.87.

பின்பு சாட்சிகள் கிருஷ்ணன் மற்றும் விஜய் ஆகியோருடனும் பள்ளிக்கொண்டா காவல் நிலைய எழுத்தர் த.கா.2394 முத்துக்குமரன் ஆகியோர் முன்னிலையிலும் பள்ளிக்கொண்டா காவலர் குடியிருப்பில்

உள்ள கதவு எண். 2/12 என்ற உதவி ஆய்வாளர் குடியிருப்பில் கதவை த.கா.முத்துக்குமரன் காவல் நிலையத்தில் வைத்திருந்த சாவியின் மூலம் காலை 11.30 மணிக்கு திறந்து வீடு முழுவரும் சோதனையிட்டோம்.

சோதனையின்போது முன் அறையிலிருந்து இவ்வழக்கு சம்பந்தமாக 2014 வருடத்திய சேன் கிரீன் என்ற டைரி –1, 2015 வருடத்திய டைரி –1, Hand note Book –2, Wootel Red colour mobile phone அதனுடன் சேரந்து ரிலையன்ஸ் மற்றும் டாட்டா டோகோமா சிம் கார்டுகளுடன் மொபைல் போனையும், சிம் கார்டுகள் –4, அதில் வோடோ போன் சிம் கார்டு 2, ஏர்டேல் சிம்கார்டு 2, Joy Micro SD card 4 GB –1, Transcend pen drive –1, krom pen drive – 1, S. Mani என்பவரின் ஆஜர் முச்சிலிக்கா, முனிராஜ் என்வரின் ஆஜர் முச்சிலிக்கா ஆகியவற்றை வீடு சோதனை பட்டியில் சாட்சிகள் முன்பு கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன்.

அந்த சோதனை பட்டியல் ஏற்கனவே அ.த.சா.ஆ.40 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அ.த.சா.ஆ.41 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் ஏற்கனவே அ.த.சா.ஆ.42 முதல் 45 வரையிலாகவும், முனிராஜ்–ன் ஆஜர் முச்சிலிக்கா அ.த.சா.ஆ.15 ஆகவும், மணியின் ஆஜர் முச்சிலிக்கா அ.த.சா.ஆ.16 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட சான்று பொருட்கள் சா.பொ.1 முதல் சா.பொ.5 வரையிலாக குறியிடு செய்யப்பட்டுள்ளது.

அதன் பிறகு அன்றைய தினம் இவ்வழக்கில் ஷமில் பாஷா என்பவர் சிகிச்சை பெற்ற ஆம்பூர் அரசு மருத்துவமனை மற்றும் வேலூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை ஆகியவற்றின் மருத்துவ அதிகாரிகளிடம் ஷமீல் பாஷா சிகிச்சை சம்பந்தமான ஆவணங்களை கேட்டு கொடுக்கப்பட்ட வேண்டுகோள் அடிப்படையில் ஆம்பூர் அரசு மருத்துவமனை, வேலூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து ஆவணங்கள் கிடைக்கப்பெற்றன.

ஆம்பூர் தலைமை மருத்துவர் அனுப்பி வைத்த ஆவணம் இரண்டு தாள்கள் அ.த.சா.ஆ.88. அதனோடு அனுப்பி வைத்திருந்த மருத்துவ ஆவணஙகள் ஏற்கனவே அ.த.சா.ஆ.48, 78 மற்றும் எ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வேலூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஷமீல் பாஷா என்பவரின் சிகிச்சை குறித்து வழங்கிய ஆவணம் நான்கு தாள்கள் அ.த.சா.ஆ.89. (அதில் மூன்றாவது மற்றும் நான்காவது தாள்கள் தெளிவற்று இருப்பதால் அது எதிரி தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. அது குறித்து வழக்கின் இறுதி விசாரணையின் வாதுரைக்கலாம்.) அதனோடு அனுப்பிய ஒட்டுமொத்த மருத்துவ ஆவணங்கள் ஏற்கனவே அ.த.சா.ஆ.49, 50, 51, 52 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

06.07.2015–ம் தேதி இவ்வழக்கில் சாட்சிகள் சிவானந்தம், தமிழ் அழகன், கிருஷ்ணன், விஜய் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 07.07.2015 ம் தேதி இவ்வழக்கில் சாட்சிகள் சிறப்பு உதவி ஆய்வாளர் ரவி, சிறப்பு உதவி ஆய்வாளர் சிங்காரம், சிறப்பு உதவி ஆய்வாளர் கலைச்செல்வன், த.கா.345 பரத், தீபக்குமார், சதீஷ்

குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 08.07.2015 ம் தேதி சாட்சிகள் காவலர் 526 ராஜேஷ் குமார், த.கா.2302 கங்காபாய், மு.நி.கா.3537 தெய்வானை, ராஜேஷ் குமார், ரவிக்குமார், செல்வி என்ற செந்தாமரைச்செல்வி, பழனி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

09.07.2015–ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 10.07.2015 ம் தேதி இவ்வழக்கில் சாட்சிகள் அமுதா, புகழேந்தி, செந்தில், சரவணன், ஜெயபால் மற்றும் ஜெயந்தி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

அன்றைய தினம் ஆம்புர் நகர காவல் நிலையத்தின் மருத்துவமனை தகவல் பதிவேட்டின் நகலை பார்வையிட்டேன். ஆம்பூர் நகர காவல் நிலையத்தின் மருத்துவமனை தகவல் பதிவேட்டின் சான்றொப்பமிட்ட நகல் (ஐந்து தாள்கள்) அ.த.சா.ஆ.90.

17.07.2015–ம் தேதி சாட்சி பிபின் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். விசாரணையில் ஷமீல் பாஷா ஈரோடு கல்யாண் ஜுவல்லர்ஸ் கடையில் வேலை செய்ததற்கான பணி சம்பந்தமான ஆவணங்கள் மற்றும் வருகை பதிவேடு ஆகியவற்றை பெற்றேன். அது ஏற்கனவே அ.த.சா.ஆ.66 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

30.07.2015–ம் தேதி இவ்வழக்கில் வேலூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர்கள் வினோத் ராஜ்குமார், ஷமீமா, சரவணன், கௌரி சங்கர், செந்தில் குமார், சேரலாதன், ரம்யா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

31.07.2015–ம் தேதி சாட்சி அருணாச்சலம் என்பவரை அவருடைய ஊரான மோத்தப்பள்ளியில் வைத்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

03.08.2015 ம் தேதி இவ்வழக்கில் விசாரணைக்காக பெண் காணவில்லை வழக்கின் காவல் நிலையம் கொண்டுவந்து விசாரிக்கப்பட்ட ஷமீல் பாஷா என்பவரை போலீஸ் காவலில் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு அதன் காரணமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று இறந்துள்ளார் என்பதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை பிரிவு 176 கு.வி.மு.ச லிருந்து இ.த.ச பிரிவு 342, 323, 302 ஆக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையையும் கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.3 அவர்களுக்கு சமர்ப்பித்தேன்.

06.07.2015–ம் தேதி வீடு சோதனையின்போது கைப்பற்றப்பட்ட பொருட்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு 07.08.2015 அன்று அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 அ.த.சா.ஆ.91.

03.08.2015–ம் தேதி இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட ஆய்வாளர் மார்டின் பிரேம்ராஜ் அவர்கள் கன்னியாக்குமரி மாவட்டம் அழகிய பாண்டிபுரம் வனச்சரக குற்ற எண் OR No.112/2015 பிரிவு 9 of Tamil Nadu Wild Life Protection Act என்ற வழக்கில் கைது செய்யப்பட்டு பாளையங்கோட்டை மத்திய சிறையில் இருக்கும் விவரம் அறிந்து அவரை இவ்வழக்கில் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த வேண்டி PT வாரண்ட் கேட்டு கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.3 ல் மனு தாக்கல் செய்யப்பட்டது.

04.08.2015 ம் தேதி பாளையங்கோட்டை மத்திய சிறையில் இருந்த ஆய்வாளர் மார்டின் பிரேம்ராஜ் என்பவரை மத்திய சிறை கண்காணிப்பாளரின் முன்னிலையில் காலை 11.15 மணிக்கு Formal Arrest செய்யப்பட்டது.

பின்பு அவரை வழிக்காவலில் எடுத்து 05.08.2015 ம் தேதி கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.3, வேலூர் அவர்கள் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு இவ்வழக்கில் அவரை நீதிமன்ற காவலில் 15 நாட்கள் வைக்க காவல் அடைப்பு அறிக்கை கொடுத்தேன்.

அன்றைய தினம் ஆய்வாளர் மார்டின் பிரேம்ராஜ் அவர்களை போலீஸ் காவலில் வைத்து விசாரிக்க பிரிவு 167 கு.வி.மு.ச.–ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டது. அதன் பேரில் கனம் நீதிமன்றமானது ஆய்வாளர் மார்டின் பிரேம்ராஜ் அவர்களை 3 நாட்கள் போலீஸ் காவலில் வைத்து விசாரிக்க உத்தரவு பிறப்பித்தது.

அவரை வேலூர் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை அலுவலகத்திற்கு கொண்டு வந்து தகுந்த பாதுகாப்புடன் வைக்கப்பட்டது. அன்றைய தினம் புலன் விசாரணைக்கு உதவியாக இருக்க வேண்டி வருவாய் அலுவலர்களை நியமிக்க வேண்டி வேலூர் வட்டாட்சியர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தின் பேரில் கீழ்அரசம்பட்டு கிராம நிர்வாக அலுவலர் சிவக்குமார் மற்றும் வேலூர் வடக்கு வருவாய் ஆய்வாளர் தேவராஜ் ஆகியோர்களை நியமித்து பதில் அனுப்பியிருந்தார்.

06.08.2015 ம் தேதி இவ்வழக்கில் ஆய்வாளர் மார்டின் பிரேம்ராஜ் அவர்களை குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை அலுவலகம், வேலூரில் வைத்து விசாரணை மேற்கொள்ளும்போது அவர்

இவ்வழக்கில் சம்பந்தமாக எவ்வித ஒத்துழைப்பும் தராததால் அவரிடம் 110 கேள்விகள் அடங்கிய தாள் மூலம் விசாரணை அறிக்கை வழக்கு சம்பந்தமாக பதில்கள் கோரப்பட்டது. அவர் எவ்வித பதிலையும் தராததால் விசாரணை அறிக்கையில் சாட்சிகளின் கையொப்பம் பெறப்பட்டது.

அவரிடம் நடத்திய விசாரணை வீடியோவாக சிம் கார்டில் பதிவு செய்யப்பட்டது. அந்த விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.92. பின்பு சாட்சிகள் தேவராஜ், சிவக்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

07.08.2015 ம் தேதி காவல் ஆய்வாளர் மார்டின் பிரேம்ராஜ் அவர்களின் போலீஸ் காவல் முடிந்து அறிக்கையுடன் கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.3, வேலூர் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து நீதிமன்றக்காவலுக்கு உட்படுத்தினேன்.

06.08.2015 ம் தேதி ஆய்வாளர் மார்டின் பிரேம்ராஜ்–அவர்களை விசாரணை செய்தபோது பதிவு செய்யப்பட்ட வீடியோ அடங்கிய மைக்ரோ எஸ்டி மெமரி கார்டை படிவம் 91 மூலம் 07.08.2015 அன்று நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 அ.த.சா.ஆ.93. அதில் மேமரி கார்டின் எண்ணைப்பற்றி குறிப்பிடப்படவில்லை. அதில் நீதிமன்ற சாட்சிய சட்டம் பிரிவு 65B க்கான சிறப்பு சான்றிதழை நான் அதில் இணைக்கவில்லை. எனவே அந்த Memory card–ஐ குறியிடப்படவில்லை.

03.08.2015–ம் தேதி இவ்வழக்கின் சட்டப்பரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அது அ.த.சா.ஆ.94.

29.09.2015–ம் தேதி இவ்வழக்கில் சாட்சிகள் முஸ்தரி தசின், ஜெரினா பானு, முகமது ஜலால் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

11.10.2015 ம் தேதி சாட்சி முரளி என்ற சீனிவாசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 28.10.2015 ம் தேதி சாட்சி மணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

19.11.2015 ம் தேதி சாட்சி வினோத்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 24.11.2015–ம் தேதி சாட்சிகள் சிவா என்ற சிவசங்கர், முனிராஜுலு, சத்யா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 03.12.2015 ம் தேதி சாட்சி ராஜன்பாபு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

**முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

**விசாரணை முடிந்த நேரம் மாலை 04.20 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.04.29 05:57:12 +0530